## நிகழ்ச்சி நிரல்

| | | சங்கல்ப கட்டணம் ரூ. | மொத்த செலவு |
|---|---|---|---|
| **காலை** | | | |
| 6.00 மணி | ஸ்ரீ மஹா கணபதி ஹோமம் | 101 | 7,500 |
| 6.30 | கோமாதா பூஜை | 51 | 2,500 |
| 7.00 | அகோராஸ்தர ஹோமம் | 500 | 50,000 |
| | அஷ்ட பைரவர் ஹோமம் | 500 | 50,000 |
| 7.15 | ஸ்ரீவித்யா நவாவரண பூஜை<br>கே.வி.எல்.என். சர்மா<br>அவர்களால் செய்யப்படும் | 200 | 5,000 |
| | சுவாசினி பூஜை | 101 | |
| | கன்யா பூஜை | 51 | 5,000 |
| | வடுக பைரவர் பூஜை | 51 | |
| 11.30 | பூர்ணாஹுதி | | |
| 12.00 | அன்னதானம் | | 1,00,000 |
| **மாலை** | | | |
| 4.35 மணி | தங்க பாதுகை பூஜை | 201 | 2,500 |
| 4.35 | சௌபாக்யலக்ஷ்மி பூஜை | 250 | 7,000 |
| 7.30 | பிரசாதம் வழங்குதல் | | |


மகான் ஸத்குரு ஸ்ரீசேஷாத்ரி சுவாமிகளின் பிரதான சீடர்
ஜோதிட நவரத்தினமணி

**குருஜி கே.வி.எல்.என்.சர்மா அவர்கள்**

துல்லியமாக ஜாதகம் பார்த்து பலன்கள் சொல்வார். ஜாதகம் கம்ப்யூட்டரிலும் போட்டுத் தரப்படும். அதிர்ஷ்ட கற்கள் ஆலோசனையும் வழங்கப்படும். முன்பதிவு செய்து கொண்டு வரவும்.

**போன் : 24938734/24953793**


**பிரதி அமாவாசைதோறும் மாடம்பாக்கம் சக்திபீடத்தில் அருள்வாக்கு உண்டு**


ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் 18 சித்தர்கள் சக்திபீட பிருந்தாவனம்
1, சன்னதி தெரு, மாடம்பாக்கம், சென்னை – 600 126.
தொலைபேசி : 22281408, 22280407 இணைய தளம் www.seshadri.info

**காசோலை / நன்கொடைகள் அனுப்ப வேண்டிய முகவரி**

**ஸத்குரு ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் பிருந்தாவனம் டிரஸ்ட்**
21/3, புதிய எண்.43, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை – 600 004.
தொலைபேசி 24938734, 24953793
நன்கொடைகளுக்கு வருமான வரி விலக்கு 80G உண்டு


ஜெய ஜெய ஸத்குரு — ஸ்ரீ சேஷாத்ரி ஸத்குரு

**ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் துணை**

**அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்**

**சபரிவார ஸ்ரீசக்ர மஹாமேரு**

# 18 சித்தர் சக்திபீட பிருந்தாவனம்
# மகான் ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள்
# ஜெயந்தி விழா 2012

**மாடம்பாக்கம், சென்னை – 600 126.**

அவதார புருஷர்கள் பலர் உதித்த தலமான திருவண்ணாமலையில் இறைவனோடு இரண்டறக் கலந்து நம் வாழ்வில் ஒளிவீசிக் கொண்டிருக்கும் மாடம்பாக்கம் சித்தர் மகான் ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் ஜெயந்தி விழா **தை மாதம் 28–ந் தேதி பிப்ரவரி 11 சனிக்கிழமை,** கணபதி ஹோமம், கோபூஜை, அன்னதானம் போன்ற புனித நிகழ்ச்சிகளுடன் மாடம்பாக்கம் சபரிவார ஸ்ரீ சக்ர மஹாமேரு 18 சித்தர் சக்திபீட பிருந்தாவனத்தில் நடைபெற உள்ளது.

ஸத்குரு ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகளின் அருளாசியுடன் அம்பிகையை மையமாக வைத்து 18 சித்தர்களுக்கும் மற்ற தெய்வங்களுக்கும் ஆலயங்கள் நிர்மாணித்து இரு முறை (2004, 2009) கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்தேறியது. மதில் சுவர் (Compound Wall) கட்டும் திருப்பணி தற்சமயம் நடந்து கொண்டு இருப்பதால் தங்களால் இயன்ற உதவி செய்து ஸத்குரு 18 சித்தர்கள் பராசக்தியின் அருளாசிகளைப் பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

### ஹோமங்கள்/பூஜைகள், பலன்கள், பரிகார விவரம்

பிரம்ம ஞானிகளுக்கு நடக்கும் விழாவில் செய்யும் ஹோமங்களுக்கு ஆயிரம் மடங்கு பலன் கிடைக்கும். பித்ருக்கள் சாபம் நீங்கும். லக்ஷ்மி கடாக்ஷம் பொங்கும்.

### கணபதி ஹோமம் :

நினைத்தது நினைத்தபடி நடக்கும். சகலவிதமான தோஷங்கள் நீங்கும். சகல காரியசித்தியை அளிக்கும் ஹோமம்.

**தேவையான பொருட்கள் :**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| கலச வேஷ்டி | 400 | பூர்ணாஹுதி | |
| மோதகம் | 1,500 | பட்டு பிட்டு | 300 |
| அருகம்புல் மாலை | 400 | பழதிரவியம் | 500 |
| புஷ்பம் | 500 | நெய் | 500 |
| கணபதி வஸ்திரம் | 1,000 | நைவேத்தியம் | 600 |

**கோமாதா பூஜை:**

பூர்வ ஜென்ம பாவங்கள் நீங்கும். சர்வ வியாதிகள் நீங்கும்.

கோ வஸ்திரம் ரூ. 500/– பூமாலை ரூ. 500/–.

**ஸ்ரீ வித்யா நவாவரண பூஜை :**

சிவனையும், சக்தியையும் இணைத்து நமக்குள்ளேயே தரிசனம் செய்யும் வழிபாட்டு நெறிமுறைதான் ஸ்ரீவித்யா தத்துவம். வாழ்க்கையில் எந்தவிதமான சிக்கலாக இருந்தாலும் உடனே விலகி, எண்ணியது நிறைவேறும். குருஜி திரு. K.V.L.N. சர்மா அவர்கள் ஸ்ரீவித்யா நவாவரண பூஜையை மிகவும் விமரிசையாக செய்து வருகிறார்.

தேவையான பொருட்கள் : சுவாசினி பட்டு புடவை ரூ. 4,500/– கன்யா பட்டு பாவாடை ரூ. 2,000/– வடுகர் வேஷ்டி, துண்டு ரூ. 500/–

**அகோராஸ்தர ஹோமம் :**

மரணத்தை ஜெயிக்கக்கூடிய வேத மந்திரத்தால் சிவபெருமானைக் குறித்து செய்யப்படும் புனித வேள்வி மிருத்யுஞ்ஜெய மந்திரம் என்ற வேத மந்திரத்தை ஜபித்த மாத்திரத்திலேயே சகல பாவங்களும் நிவர்த்தி அடைகிறது. ஏவல், பில்லி சூனியம், பூதம், பேய், பிசாசு இவைகளால் ஏற்படும் தொல்லைகள், மரணபயம், எதிர்பாராத சாலை விபத்து, எதிரிகளால் தொல்லை, தீராத வழக்குகள், வியாபாரத்தில் போட்டி, மன அமைதி குறைவு, உடம்பில் தீராத நோய்கள் நீங்கும். 60ம் ஆண்டு நிறைவு விழா, ஆயுஷ்ய ஹோமம், சதாபிஷேகம், பீமரதசாந்தி செய்து கொள்ள முடியாதவர்கள் இதில் பங்கேற்பது நல்லது.

**தேவையான பொருட்கள் :**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| நெய் 5 கிலோ | 2,000 | வில்வம் 1 கூடை | 600 |
| சமித்து | 700 | வெண்பட்டு 9/5 | 4,000 |
| அசோகன் அல்வா 4 கிலோ | 2,000 | பட்டு பிட்டு | 400 |
| மஞ்சள் 8 கிலோ | 2,500 | பூர்ணாஹுதி மாலை | 700 |
| வெண்கடுகு 2 கிலோ | 200 | | |

**பலன்கள்:**

1. மரணபயம் நீங்கி எதிலும் வெற்றி அடையலாம்.
2. ஜாதகத்தில் சூரிய கிரகத்தினால் தோஷம் ஏற்பட்டவர்கள் இதில் பங்கேற்று பயனடையலாம்.
3. ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சை பிரிவில் உள்ளவர்கள் நலமடைய செய்து கொள்ளலாம். இதில் பங்கேற்கும் அன்பர்களுக்கு சூரிய பகவான் எல்லா நன்மைகளையும் அளிப்பார். எதிரிகளையும் வெல்லலாம். ஆயுள் அபிவிருத்தி ஏற்படும்.

**அஷ்ட பைரவர் ஹோமம்**

சிவனின் அம்சமான இவர் எட்டு வடிவங்களில் அருள்பாலிக்கிறார். உக்ர மூர்த்தியான இவர் உலகெங்கும் வியாபித்திருப்பவர். இவர் காசி க்ஷேத்திரத்தின் க்ஷேத்திர பாலர். இவர் ஊரின் எல்லைகளில் காவல் தெய்வமாக முனீஸ்வரராக விளங்குகிறார். நாய் வாகனத்தின் மீது அமர்ந்து அருள்புரிபவர். பிரும்மா பொய் சொன்ன காரணத்தினால் அவரின் அகந்தையை அழித்து தலையைக் கிள்ளி எறிந்தவர்.

**இந்த ஹோமத்தில் கலந்து கொண்டால் ஏற்படும் பலன்கள்:**

- மனக்குழப்பங்கள் நீங்கும்
- வீண் பயம் நீங்கும், தைரியம் ஏற்படும்.
- பக்தர்களுக்கு இன்பம் ஏற்படும்
- பாபத்தைப் போக்குபவர்
- வீரம், ஞானம் ஏற்படும்
- அறியாமை விலகும்
- தீமைகள் அகலும்
- நவக்கிரக தோஷங்கள் நீங்கும்
- பிரம்மஹத்தி தோஷம் நீங்கும்
- அனைத்து பிரச்சனைகளும் நீங்கி அஷ்ட ஐஸ்வர்யம் ஏற்படும்.

**தேவையான பொருட்கள் :**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| நெய் 5 கிலோ | 2,000 | தேன் குழல் 500 | 3,000 |
| மிளகு வடை 500 | 5,000 | சமித்து | 700 |
| வெண்கடுகு 3 கிலோ | 300 | பட்டு வேட்டி 9/5 | 4,000 |
| தயிர் சாதம் 5 கிலோ | 400 | பட்டு பிட்டு | 400 |
| | | பூர்ணாஹுதி மாலை | 700 |

**தங்க பாதுகை பூஜை :**

ஸ்ரீகுரு பாத தரிசனம் பாபவிமோசனம். ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகளின் விசேட சக்தியினால் நினைத்த காரியம் நிறைவேறும். ஸத்குருவின் பாத துளிகளிலிருந்து கிளம்பும் பேரொளி மனதில் எல்லையில்லா மகிழ்ச்சியை அளிக்கும்.

**சுவாசினி பூஜை :**

ஜாதகத்தில் ராகு, கிரக தோஷம், நரம்பு சம்பந்தப்பட்ட கோளாறுகள் நீங்கி, பலன் அடையலாம். சுமங்கலி சாபம் அகலும்.

தேவையான பொருட்கள் : பட்டு புடவை ரூ. 4,500/– பாவாடை ரூ. 2,000/–.

**சௌபாக்ய லக்ஷ்மி பூஜை :**

கடந்த பல ஆண்டுகளில் நடந்த மகானின் ஆராதனை/ஜெயந்தி விழாக் களில் கிடைத்த அபூர்வமான, அற்புதமான சௌபாக்கிய பொருட்களை வைத்து நடத்தப்படும் பூஜையாகும்.

எதிர்பாராத செல்வம் கிட்டும். புத்திர பாக்கியம் கிடைக்கும். பூஜை நேரத்தில் பிரார்த்தனை செய்து ஸத்குருவிற்கு காணிக்கை செலுத்தினால் நினைத்த காரியம் சித்தி அடையும்.

**அன்னதானம் :** பூர்வ ஜென்ம தோஷங்கள் அனைத்தும் நீங்கும்.